Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம் (1889) ஆவணி மாதம் 28 ம் உ. ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்.-௬௩] யாழ்ப்பாணம்:- கரஹு புரட்டாதிமீ ௫ உ. வெள்ளிக்கிழமை (21 செப்டெம்பர் 1951) [இல். - ௭௬]

## விநாயகக் கடவுள்

### விநாயகரைப்பற்றி, சிவபூசை விளக்கத்திற்கண்ட தத்துவ விளக்கம்

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்,
சரணவற்புத மலர் தலைக் கணிவோமே.

விநாயகர் யானைமுகம், மூன்று கண்கள், ஐந்து கரங்கள், பெருத்த வயிறு, ஒரு கொம்பு, மும்மதம், இரண்டு திருவடியுடையவர். தமது கரங்களில் தந்தம், பாசம், அங்குசம் பாஞ்ச சந்நியம் முதலியவற்றைக் கொண்டுளார்.

கயமுகனைச் சங்கரிப்பதற்காக முரிந்த ஒரு கொம்பை ஏந்தியது மும்மலங்களை நீக்குபவர் தாம் என்பதைக் காட்டுதற்காம். உயிர்களைப் பாதிக்கும் ஆணவமலமாகிய யானையைப் பாசத்தாற் கட்டி அங்குசத்தால் அடக்கி, மறைத்த லென்னும் கருணைபுரிபவர் தாம் என்பதை அறிவித்தற்காகப் பாசாங்குசங்களை ஏந்தினர். ஆணவத்தைப் போக்கி உயிரை ஆட்கொள்பவர் என்பது ஆணவ சொருபனாகிய கயமுகனைப் பாசக் கயிற்றாற் கட்டி, அங்குசத்தால் அடக்கி, அவன் மலத்தை நீக்கிச் சுத்தனாக்கி அவனைத் தமக்கு வாகனமாக்கிக் கொண்டு பெரும் பேற்றை அளித்தார் என்பதால் போதரும். இவருடைய துதிக்கை விக்தாரத தத்துவத்தைக் குறிப்பித்து இவரது ஞான சொருபத்தை அறிவிக்கின்றது. அடியார்கள் பசுஞானத்தைக் கவளமாக ஒப்பிக்க, அதனை உண்டு தமது பேழைவயிற்றில் தறுத்துச் சிவஞானத்தைக் கொடுப்பவர் தாம் என்பதை உணர்த்தும் பொருட்டுக் கவளவுணவாகிய மோதகத்தை ஒர் கையிற்கொண்டார்.

உள்ளமெனுங் கூடத்தி
லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந்
தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக்
கவளமிடக்
களிந்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி
வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.
—திருவிளையாடற் புராணம்

சிவபெருமான் பஞ்சகிருத்தியாவதிபர் தாம் என்பதை ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களால் உணர்த்துதல் போல, விநாயகரும் துதிக்கை முதலிய ஐந்து கரங்களால் உணர்த்துகின்றார்.

இவர் உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளுமாய் விளங்குபவர். யானை முகமும் தேவசரீரமும் உடையவர்.

உயர்திணையு மஃறிணையும்
படைத்தளித்துத்
துடைக்குமுத லொருதானே
[யென்று
அயர்வற எத்தகை யோருமறிந்
துய்யத்
தெரிக்குமடையாளம் வைப்பப்
பெயர்சொலுயர் திணையுமஃ
றிணையும்



சிரமிய வுருவிற் பிறங்குவானை
மயர்வடிய வர்க்ககற்றுமொரு
மருப்பானை
விநாயகனை வணங்குவாமால்
— (சூதசங்கிதை)

## பௌத்த கோவிலில் முருகக் கடவுட் பிரதிஷ்டை

நவரத்தினங்கள் வைத்திழைத்த கந்தக் கடவுளின் தங்க விக்கிரகம்.

மொறட்டுவாவில் 'வெலிலானு' என்னுமிடத்தி லுள்ள அரசினர் கைத்தொழில் ஆராய்ச்சித் தாபனத்தின் செப்புவேலைத் தொழிற்சாலையில் கதிர்காமக் கடவுளின் (முருகக் கடவுளின்) தங்க விக்கிரகமொன்று நவரத்தினங்கள் வைத்திழைக்கப்பட்டு 1ς,000 ரூபா செலவில் வெகு சிறப்பாய் வேலை முடிந்திருக்கிறதாம். இவ்வுருவம் "லுனுவ"விலுள்ள "வலுகாருமாயா" என்னும் புத்த ஆலயத்தில் ஸ்தாபனம் பண்ணும் பொருட்டு அவ்வாலயத்தின் அதிகாரியாகிய ஸ்ரீவிசுதானந்தபுத்த குருவினால் செய்விக்கப் பெற்றது. இவ்விக்கிரகத்தை ஸ்தாபனஞ் செய்தற்கு "லுனுவ" கோயில் வளவில் ஓர் அழகிய ஆலயமும் 4,000 ரூபா செலவில் கட்டப்பெற்று விட்டது. திருவுருவத்தை, அதற்கென அமைக்கப்பெற்றுள்ள ஆலயத்தில் தாபனஞ்செய்தற்கு வருகிற மாதம் முற்பகுதியில் நாள் நியமிக்கப்படுமாம்.

## பள்ளிப் பிள்ளைகள் சம்பளம் பற்றிய விசாரணை

இலவசப் பாடசாலைகளிற் படிக்கும் பிள்ளைகள் செலுத்த வேண்டிய சௌகரியச் சம்பளத்தைக் (facilities fees) கொடுக்கத் தவறும் பிள்ளைகள் கஷ்டப்படுத்தப் படுகிறார்களென்ற முறைப்பாட்டைக் குறித்துக் கல்வி மந்திரிப் பகுதியார் விரைவில் விசாரணை செய்வார்களென அறியப்படுகிறது. இப்போதுள்ள கல்விச் சட்டத்தின்படி இலவசப் பாடசாலைகளின் பிரதம ஆசிரியர் ஒவ்வோர் பிள்ளையிடமும் மாதமொன்றுக்கு ரூபா ஐந்துக்கு மேற்படாத சௌகரியச் சம்பளம் அறவிடலாம். இச்சம்பளத்தைக் குறித்த கால எல்லைக்குட் கொடுக்கத் தவறும் பிள்ளைகள் வகுப்பிலிருந்து துரத்தப்படுகிறார்களென அப் பிள்ளைகளின் பெற்றோர் மந்திரிப் பகுதியாருக்கு முறைப்பாடு செய்திருக்கின்றனர். சம்பளத்தை நியமிக்கப்பட்ட காலத்திற் கொடுக்கத்தவறும் பிள்ளைகளைத் தண்டிக்கச் சட்டம் இடங்கொடாதென வித்தியாதிகாரி பல முறைகளில் அறிவித்திருக்கின்றனர். எனினும், சம்பளத்தைத் தவணை தப்பாது கட்டுதற்கு வகையற்ற பிள்ளைகளை வகுப்பிலிருந்து துரத்தியும், முழுப் பணத்தையுங் கட்டினாலன்றி வகுப்பிற் சேரவிடாது தடுத்தும் உபாத்தியாயர்கள் பிள்ளைகளைத் தண்டிக்கின்றனர். விளையாட்டு, வாசிகசாலை முதலிய சௌகரியங்களுள்ள பாடசாலைகளில் அச் சௌகரியங்களைப் பிள்ளைகள் பயன்படுத்துவதன் பொருட்டாகவே சௌகரியச் சம்பளம் (facilities fees) அறவிடப்படுகிறது.

## "இலங்கையில் ஜர்மனிய கிறிஸ்தவ அறிஞர் இந்துவானர்"

"ஜர்மனி நாட்டு அறிஞரும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவருமான வெள்ளைக்காரர் ஒருவர் சமய நூல்களைத் தருவி ஆராய்ந்து புத்த மதத்தைத் தழுவி புத்தபிக்ஷுவாகி லோக சஞ்சாரஞ் செய்து வந்தார்; அவர் இப்பொழுது கதிர்காமத்து முருகக் கடவுளுக்கு அடியாராகி "கௌரி பாலர்" என்னும் பெயருடன் கல்லாடை உருத்திராக்கம் அணிந்து இந்துமத உண்மைகளை நன்குணர்ந்து இந்துவாயிருக்கிறார்...."

—தொண்டன்.

## தோத்திரம்

உ

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

நில்லாக் குரம்பை நிலையாக்கருதி யிந் நீணிலத்தோன்
றில்லாக் குழிவீழ்ந் தயர்வுறு வேனைவந் தாண்டுகொண்டாய்
வில்லேர் புருவத் துமையாள் கணவா விடிற்கெடுவேன்
செல்வா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.
— அப்பர் சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

விற்போன்ற அழகிய கட்புருவத்தைக்கொண்ட பெரிய நாயகியம்மையார்க்குத் தலைவரே, திருவருட் செல்வரே, திருச்சத்தி முற்றமென்னுந் தலத்திற் கோயில்கொண்டருளிய சிவக்கொழுந்தீசுவரரே, இப் பூவுலகத்திலே நிலையற்றதாகிய இந்த உடம்பினை நிலையானதென மதித்து பற்றுக்கோடாக) ஒரு தெய்வமுமில்லாத சமண சமயத்தில் அகப்பட்டு வருந்திய தமியேனை, (சூலை நோயைத் தந்து) வந்து தடுத்தாட் கொண்டருளினீர், (இனியும்) தேவரீர் கைவிட்டால் மாண்டொழிவேன் என்பது சொற்பொருள். குரம்பை - உடம்பு. (4)

## பிற நாடுகளுக்கு அதிக பணம அனுப்பலாமாம்

பணப்போக்குவரவுக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பேருகத் தங்கப்பவுண் நாணயத்தை (Sterling) வழங்குந் தேசங்களுக்கு அனுப்பக்கூடிய பணத்தொகையும், அத்தேசங்களிற்செய்யு பிரயாணத்தின் பொருட்டு அனுமதிக்கப்படும் பணத் தொகையும் அதிகரித்திருக்கின்றன. இனிமேல் 15 ரூபாவுக்கு உட்பட்ட பணத் தொகைகளை அனுப்புதற்கு உத்தரவாவது அரசிக் கூப்பன் (Coupon) புத்தகங்களைக் காட்டவாவது தேவையில்லையாம். கடிதமூலமாகவும் தந்தி மூலமாகவும் "மனி ஆடர்ல்" அல்லது வங்கி உண்டியல் (Bankdraft) மூலமாகவும் 250 ரூபாவுக்கு அதிகப்படாத தொகைகள் அனுப்பலாகும். ஆனால் இத்தொகைகளை அனுப்புவோர் கடிதநிலையத்தில் அல்லது 'பண வங்கியில்' தங்கள் அரிசிக் கூப்பன்களைக் காட்டிப் பதிவு பெற்றுக்கொள்ள வேண்டும். வங்கிகளிற் பணம் இட்டிருப்போர் தங்கள் சொந்த உபயோகத்தின் பொருட்டு 1000 ரூபாவுக் குட்பட்ட பணம் அனுப்பலாம். இவர்கள் எத் தேவையின் பொருட்டுப் பணம் அனுப்புகிறார்களென்பதை அதற்குரிய மாதிரிப் பத்திரத்தில் எழுதி அறிவித்தல் வேண்டும். பிரயாணங்களுக்குரிய நாடுகள்: இந்தியா, பாகிஸ்தான், பேர்மா, மலேயா வென்னும் நாடுகளுக்குப்போவோர், ஒவ்வொருவரும் 2000 ரூபாவுக்கு மேற்படாமலும், 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் ஒவ்வொருவரும் 1000 ரூபாவுக்கு மேற்படாமலும் கொண்டு போகலாமாம். தங்கப் பவுண் நாணயத்தைக் கைக்கொள்ளாத பிற தேசங்களுக்குப் போவோர், ஆளுக்கு 500 பவுணும் 16 வயதுக்குட்பட்டவர்கள் ஆளுக்கு 250 பவுணும் கொண்டு போகலாமாம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கர ஞூ புரட்டாதி மீ ௫ உ வெள்ளிக்கிழமை

## இந்நாட்டிலே தற்கொலை அதிகப்படுதல்

சில ஆண்டுகளாக இந்த நாட்டிலே ஆண்கள் பெண்கள் தாங்களே தங்களுயிரை நீக்கிக் கொள்ளுதலாகிய தற்கொலையெனப்படும் பயங்கரமான செயல் அதிகப்படலாயிற்று; கொழும்பிலிருந்து வெளிவரும் தினசரிகளில், இரண்டு மூன்று தினங்களுக்கிடையில் ஒருவர் இருவர் தற்கொலை செய்தார்களென்ற அமங்கலச் செய்தியை வாசிக்கக் காத்திருக்கலாகும். தற்கொலை பலவகையாற் பல காரணங்களால் இங்கே செய்யப்படுகிறதெனலாம்; தன்னைத் தானே துப்பாக்கியினாற் சுட்டு உயிர் மாய்த்தலும், கிணற்றுள் ஆற்றுள் கடலுள் ஏனைய நீர்நிலையில் வீழ்ந்து மாண்டு தற்கொலை செய்தலும், மரக்கொம்பரிலாக வீட்டுவளை முதலியவற்றிலாகக் கயிற்றின் ஒரு நுனியைமாட்டி, மற்றை நுனியிற் சுருக்கிட்டுக் கழுத்தில் மாட்டித் தூங்கியிறத்தலும் இன்ன பிற உபாயங்களும் இக்காலத்திற் குறைந்துவிட, நச்சுத்திராவகத்தை உட்கொண்டு தம் முயிர் மாய்த்தலே இப்பொழுது அதிகப்படலாயிற்று; இற்றைக்குச் சில தினங்களுக்குமுன் 10 வயதுப் பிராயமுடைய ஒரு சிறுமி நச்சுத் திராவகத்தைக் குடித்துத் தன்னுயிர் விட்டாளென்ற செய்தி கொழும்புத் தினசரிகளில் வெளிவரலாயிற்று; இச்சிறுமி இப்படி ஏன் செய்தாளென்பதற்குக் காரணமுங் காட்டப்படவில்லை; இவைகளையெல்லாம் உத்தேசிக்குமிடத்து, இந்த இலங்கையிலே தற்கொலைசெய்தலாகிய இப் பயங்கரமான செயல் இன்னு மதிகப்படுமென எண்ணி அஞ்சக் கிடக்கின்றது.

இனி, இவர்கள் தற்கொலை செய்தற்குக் காரணங்களென்னையென ஆராயும்போது சில புலப்படுகின்றன. புருஷன மனைவிக்கிடையே யுண்டாகும் பிணக்குக் காரணமாகப் புருஷன் மனைவியைப் பெரிதும் இம்சிக்க, அவள் ஆற்றாது தன்னுயிர் மாய்த்தல்; சோரமாகப் பரஸ்பரங் காதல்கொண்ட வாலிபனும் யுவதியும் தங்கள்காதல் முற்றிவிட, இதற்கிடையிற் பெற்றோர் சுற்றத்தார் இவர்களுடைய நோக்கத்திற்கு மாறாக நிற்க, இவர்களிருவரேனும் ஒருவரேனும், தற்கொலை செய்தல், தாங்கொணா வறுமை காரணமாகப் பிள்ளைகளின் உயிரை மாய்த்துத் தாயேனுந் தந்தையேனும் தற்கொலை புரிதல்; தீராக்கவலை காரணமாகத் தன்னுயிர் நீத்தல்; சகிக்கமுடியாத கொடிய நோய்காரணமாகத் தற்கொலை செய்தன் முதலிய இவைகளே பிரதான ஏதுக்களெனலாம்; சில சமயங்களிற்கொலையும் தற்கொலையாக மாறுவதுண்டு.

தற்கொலை செய்தற்காகிய வையென மேலே எடுத்துக்காட்டப்பட்ட ஏதுக்கள் இக்காலத்தில் மாத்திரமல்ல முற்காலத்திலுமுண்டுதானே, ஆனால் முற்காலத்திலே தற்கொலை குன்றியதாக, இக்காலத்தில் அதிகப்படுவானேனெனில், அதிகப்படுதற்குஞாயமுண்டு; அற்பகவலை, இடைஞ்சல் நேர்ந்தவிடத்துந் தற்கொலை செய்தலாகிய தீமை மேனாட்டாரிடத்து அதிகமாயிருந்தது; அவர்களுடைய பரிபாலனத்தில் நீடித்த காலம் அகப்பட்டு வசித்த இந்நாட்டு மக்களும் இத் தற்கொலை செய்தலாகிய பயங்கரச்செயலை அவர்களைப் பார்த்துப் பின்பற்றினர்போலும்; மேலும் இக்காலத்திலே, தற்கொலை செய்தல் கொலையைக் காட்டிலும் மகா பாதகச் செயலாகுமென்று சொல்லும் நீதிநூல்களைப் படிப்பாரும் படிப்பிப்பாருமில்லையாயினர்; எங்கள் சைவ நூல்களிலே தம்முயிர் மாய்ப்போர் மீளா நரகிற் காளவரென்று விதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வகையான துன்பங்கள் நேர்ந்தாலும், நோய்கள் பீடித்தாலும் அவைகளெல்லாம் அவரவர் முற்பிறப்பிற் செய்த கன்மத்தின் பயன், அவற்றை அநுபவித்தே தீரவேண்டும், தாந்தான் செய்தவினை தாமேயனுபவிப்பர், எல்லாம இறைவன் செயல், எதனையும் அனுபவித்தே தீரவேண்டும் என்பன போன்ற கொள்கைகள் சைவ சமயத்திலுண்டு; ஏனைய சமயங்களிலும் தற்கொலை தவறானதென்ற விதியுண்டென வெண்ணுகின்றேம். எனவே, சமயநூற கல்வியைச் சிறுவயசிற்றானே பிள்ளைகளுக்கு உறுதியாகப் படிப்பித்தல் வேண்டும்; இக்காலத்திலே சமய நூற் கல்வி பள்ளிக்கூடங்களில் அலட்சியஞ் செய்யப்படுகிறது.

இவைமாத்திரமல்லாமல், தெய்வத்திலே திடபக்தி கொண்டவர்கள், நன்மையுந் தீமையும ஊழின் செயலாயினும், அவற்றைத் தெய்வ வழிபாட்டினாற் குறைக்கலாமென்ற பூரண நம்பிக்கை கொண்டவர்கள், எவ்வகையான மனக்கவலை நேர்ந்தாலும் அவற்றால்மனமுடைந்து தம்முயிர் மாய்க்கத் துணியார்கள். இவர்கள் இன்பத்தையுந் துன்பத்தையும் ஒரே பெற்றினவாய் மதிக்கத்தக்கவராவர்; இதனை:-

"இன்பம தடைந்தகாலை யினிதென
மகிழ்ச்சி யெய்தார்
துன்பம துற்றபோதுந் துண்ணெனத்
துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந்தானும்
இவ்வுடற் கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார்
முழுவது முணர்ந்த நீரார்"

என வருதலாலும் அறிதலாகும்.

தற்கொலையை இந்நாட்டிலே நேராவண்ணந் தடுத்தற்கு ஒரு வழி, குறித்த நச்சுத்திராவகத்தைக் கண்டபேருக்கும் விற்றலின்றிக் சட்டுப்படுத்துதலாகுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அதனால் இத் தீமை அதிகங் குறையப் போவதில்லை; சாகத் துணிந்தவரைத் தடுத்தல்முடியாதென்பர்; ஆனால் அவர் தற்கொலை செய்தலைத் தாமாக வுணர்ந்து விடச் செய்தற்குச் சாதனமாக வுள்ளவைகள் தத்தமக்குரிய சமய நூல் நீதி நூல்களினறிவு, சமய ஒழுக்கம, தெய்வ நம்பிக்கை யென்னுமிவைகளே யெனலாம்; ஆனால் இவைகளை இங்குள்ள எச்சாதியாரும் எச் சமயத்தாரும் நன்கு பயின்றனுகைக் கொண்டு நடப்பரேல் தற்கொலை இந்நாட்டில் ஒருவாறு குறையுமெனலாகும்.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (23-9-51—29-9-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

சனசமூக விஷயமாக அனுகூலமான வாரம். மகிழ்ச்சிக்கிடமுண்டு, அந்நியரால் உதவியுண்டு, பகைவர்கள் வெல்ல முடியாது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

பணவருவாயுண்டு. தேக சுகத்தைப் பேணுக. வயிற்றில் நோய் நேரக்கூடும். உத்தியோக விஷயமாக அற்ப பிணக்கு நேர்ந்தாலும் அதனாற் பிழை வராது.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

குடும்ப விஷயத்திற் சில விருத்தியுண்டு. தொடங்குங் கருமங்களைப் பெரியோரோடு கலந்து யோசித்துச் செய்க. சில பெரும் பொறுப்புக்களை விரைவில் ஏற்கவேண்டி வரும்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

நல்ல முயற்சி செய்வதற்கு ஏற்ற வாரம். ஆவசியகமான முயற்சிகளைத் தொடங்கலாம். சனசமூக விஷயமாக விருத்திகளுண்டாம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

சங்கடம் நேர்ந்தாலும் ஆறுதலுமுண்டு. ஆண்களாற் பெண்களுக்கும் பெண்களால் ஆண்களுக்கும் பரஸ்பரம் உதவியுண்டு. கிழமை முடிவிலே சில விபரீத விளக்கம நேரக்கூடும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

தேகசுகங் குன்றும். மோசமான மாறுதலும் நடக்கக்கூடும்; யோசனையின்றி எதனையுஞ் செய்யவொண்ணாது. செய்யுங் கருமங்களின் போக்கையும் மாற்றவேண்டாம்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

இவ் வாரத்தில் வருவாயைக் காட்டிலும் செலவதிகமாம். எந்தக்கருமத்தைத் தொடங்கினாலும் அதிகம் பிரயாசைப் பட்டபின்தான் நிறைவேறும். பிதுர் வழியாற் சங்கடம் நேரும். ஆனாற் சிநேகிதராலுதவியுண்டாம்.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வினைத்தலவிற்குப் பொருள் வருவயுண்டு. கிழமையின் முதன் மூன்று நாளும் அவதானமாக நடமாடுக. புதிய மாறுதல்களைச் செய்யலாம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

வாரத்தின் முதன் மூன்று நாளும் அதிக முயற்சியுண்டு. உத்தியோகத்திற் பிணக்கும், மனக் கவலையும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை முடிய நேரும். எஞ்சிய நாட்கள் எக் கருமத்திற்கும் நல்லன.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

பார்க்குங் கருமங்களில் மாறுதல் செய்யலாம். ஆனால் நல்லார் பெரியாரை யோசித்துச் செய்யவும். வெள்ளி சனிக் கிழமைகளிற் சாவதானமாக நடந்து கொள்ளவும். கிழமை முடிவிற் பிதா வழியாரால் இடைஞ்சல் நேரும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

ஆண்களைப் பெண்களும் பெண்களை ஆண்களும் அதிகம் நம்பியிருக்கவொண்ணாது. அந்தரங்க பகைவரால் பழிச்சொறகேட்கவும் கஷ்டப்படவும் நேரும். குடும்பத்துள் யாருக்கும் நோய் காண நேரும். ஈற்றில் நன்மையுண்டாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

குடும்பத்திற் பிணக்கு நேரக்கூடும். பிணக்குக் காரணர் மாமன் மாமியாயிருக்கலாம். ஒருவரோடும் வாக்குவாதம பண்ணவொண்ணாது. நிர ஆலோசியாமல் எதனையுஞ் செய்யக்கூடாது. வாரமுடிவிலே பண வருவாயுண்டு.

## செத்தகுழந்தையை வைத்துக்கொண்டு உயிர்க் குழந்தையை ஆற்றில் வீசிய பிதா

வடஇந்தியாவிலே புருஷன் மனைவியாகிய இருவரும தங்கள் குழந்தைகளிரண்டினையுங் கொண்டு பஸ்மார்க்கமாகப் பிரயாணஞ் செய்யும போது, இடைவழியில் ஒரு குழந்தை இறந்து விட்டது, பிதா இறந்த குழந்தையை மார்க்கத்தில் வரும் நதி யெதிர்ப்படில் அதில் வீசிவிடுவதென நிச்சயித்துக் கொண்டான்; பாஞ்சாலத்திலுள்ள ஐந்து நதிகளிலொன்றாகிய பியஸ் நதிமீது பஸ் ஓடும்போது அதிலிருந்த பிதா, அந்தநேரம உறங்கிக் கிடந்த மற்றக் குழந்தையைப் பிணமென்றெண்ணி உடனேயெடுத்து ஆற்றில் வீசிவிட அது வீழ்ந்து மாண்டதாம்; எஞ்சிய குழந்தைதான பிணமென்பதை அவன் பின்பு அறிந்து பச்சாத்தாபப்பட்டானும்.

## விரிவுரை

கொழும்பு விவேகானந்த சபை திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைகளின் ஆதரவில், நிகழும் புரட்டாதிமீ 6-ந் தேதி (22-9-51) சனிக்கிழமை மாலை 5½ மணி தொடக்கம் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தற் சென்னை, கலைமகள் ஆசிரியர் திரு. K. V. ஜெகந்நாதன் (M. A., B. O. L.) "சமயமும வாழ்க்கையும்" என்னும் விஷயத்திற் பிரசங்கஞ் செய்வார் என மேற்படி சபைகளின் காரியதரிசிகள் தெரிவிக்கின்றனர்.

## ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி செப்ரெம்பர் 22**

7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 தஞ்சாவூர் எம் ஹம்ஸவல்லி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள்கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 எச் எம் வி வாத்ய கோஷ்டி* 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம்* 2 45 முடிவு.

மாலை 5 30 வித்வான் ஆ இ ரோ வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 என் வி பார்த்தசாரதிபாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கவிச்செல்வேளிர் 9 30 போலாநாத் பட் ஒலிப்பதிவு 10 முடிவு

**திருச்சி ஞாயிறு செப் 23**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி சதமபநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 டி என் ராஜரத்னம் பிள்ளை நாதஸ்வரம் * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 காதல்வலை* 2 தமிழில்செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசைநிகழ்ச்சி 3 முடிவு

மாலை 5 30 ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் ஆர் கமலாவதி கிருஷ்ணமூர்த்தி இருவீணைகள் 5 45 சிதம்பரம் வி கல்பகம் பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை * 6 20 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 8 மைலம் பி வஜ்ரவேலுமுதலியார் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர், ஆர் கமலாவதி கிருஷ்ணமூர்த்தி இருவீணைகள் 10 முடிவு

**திருச்சி திங்கள் செப் 24**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 காவேயார்கோயில் எம் எஸ் ஷண்முகசுந்தரம்பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வாத்யகோஷ்டி * 2 தமிழில்செய்தி 2 10 ஜி ஜயலக்ஷ்மி, ஜி ஐம்பகலக்ஷ்மி பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 டி வி சிவசிதம்பர ஐயர் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 காஷ்மீரில் அரசியல் கிர்ணயம் பேச்சு 8 டி வி சிவசிதம்பர ஐயர் புல்லாங்குழல் 8 30 லவிதா வெங்கடராமன் வீணை, பாட்டு * 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 காவேயார்கோயில் எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் செப் 25**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 பத்மினி சாரங்கன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 இசைவேளை *1 40 ஹிந்தியில்செய்தி 1 50 என் வி வசந்தகோகிலம்* 2 தமிழில்செய்தி 2 10 கும்பகோணம் என். ஆத்மநாதன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 சிக்கில் டி என் சிங்காரவேலுபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 பத்மினி சாரங்கன் பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 ஐந்து வருஷ திட்டம் பேச்சு 7 45 வி துரைசாமி ஐயங்கார் வீணை 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சிக்கில் டி என் சிங்காரவேலு பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.


L K S LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாண நகரசபை விளம்பரம்

இதன் பின்னுற் சொல்லப்படும் சந்தைகளிலும் காலையிலும் பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் பஸ் ஸ்ராண்டிலும் 1952 ம் ஆண்டு தை மாதம் 1ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்குக் காசு அறவிடும் உருத்தைக் குத்தகையாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றன. 1-ம் 6-ம் குத்தகைகளுக்கு 500/= ரூபாயும் 2-ம் 3-ம் 4-ம் குத்தகைகளுக்கு 250/= ரூபாயும் மற்றச் சந்தைகளுக்கு 50/= ரூபாயும் கட்டி எடுத்த "போயில்" கேள்வி கேட்கவேண்டும் கேள்விப் பத்திரங்கள் ஒரு கடதாசிக்கூட்டில் அடைக்கப்பட்டு அக் கூட்டின் மேற் பக்கத்தில் இடது புறமாய்ச் சந்தைக் குத்தகையின் கேள்விப்பத்திரமென்று எழுதி அதை நகரசபைக் கொம்மிஷனருடைய விலாசமிட்டு 1951 ம் ஆண்டு ஐப்பசி 27ம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்கு முன் நகர சபைக் கந்தோரில் ரெண்டர் பெட்டியில் போடவேண்டும். ஒவ்வொரு குத்தகைக்கும் பிறம்பான போயில் கேள்வி கேட்க வேண்டும் சபையால் தெரியப்பட்ட கேள்விக்காரர் குறிக்கப்பட்ட திகதியிலிருந்து 5 நாளைக்குள் கேள்வித்தொகையில் மூன்றில் ஒன்றைக் கட்டவேண்டும். 1951 ம் ஆண்டு மார்கழி மாதம் 1-ம் திகதிக்கு முன் கேள்வித்தொகையில் மூன்றில் ஒரு பங்கை முன் கட்டப்பட்ட தொகையை நீக்கி மிகுதித் தொகையை முழுமையாகவே 5-ம் 7-ம் 8-ம் 9-ம் 10-ம் சந்தைகளுக்குக் கட்டவேண்டும். மற்றச் சந்தைகளுக்குக் குத்தகைக்காரர் ஒவ்வொருவரும் அத்துடன் நொத்தாரிசுச் செலவும், முத்திரைச் செலவும் கொடுத்து 1951-ம் ஆண்டு மார்கழி மாதம் 1-ம் திகதிக்கு முன் காணியைப் பொறுப்பாகக்காட்டி பிணை உறுதியும் எழுதிக்கொள்ளவேண்டும். இதன்கிமித்தமாக 1-ம் 2-ம் 3-ம் 4-ம் 6-ம் குத்தகைகளுக்குக் கேள்வி கேட்கும் 'போமுக்குக்' கட்டும் காசுடன் இன்னும் ஒரு 150/= ரூபாய் ஒவ்வொரு குத்தகைக்கும் கட்டவேண்டும். அப்படிக் காசு கட்டத் தவறினல் போம் கொடுக்கப்படமாட்டாது.

மிகுதியான தொகையை 8 சரி பங்காய்ப்பிரித்து 8 மாதத்தில் கட்டவேண்டும். ஒவ்வொரு மாதமும் 15 ந் திகதிக்கு முன் கட்டவேண்டும் இதில் முதல் கட்டு 1952-ம் ஆண்டு தை மாதம் 15-ந் திகதிக்கு முன்னும் குத்தகையைப் பற்றிய விபரங்கள் அடங்கிய நிபந்தனைகளில் சொல்லிய பிரகாரம் கட்டவேண்டும். அப்படிக் காசு கட்டத் தவறினல் அல்லது சொல்லப்பட்ட திகதிக்குள் பிணை உறுதி எழுதத் தவறினல் கட்டிய முழுத்தொகையும் பறிமுதலாய்ப் போய்விடும். குத்தகையும் திரும்ப விற்கப்படும்.

சபைக்கு எந்தக் கேள்வியையாகுதல் அல்லது எல்லாக் கேள்வியையும் விலத்திவிட அதிகாரம் உண்டு. நிபந்தனைகளின் விபரம் இந்தக்கந்தோரில் அறிந்துகொள்ளலாம். இன்னு மேலதிகமான விபரங்களைப்பற்றி இந்தக் கந்தோரில் கேட்டறிந்துகொள்ளலாம். சந்தைக்குள் இப்பொழுது அறவிடப்படும் விகிதங்கள் குறைக்கப்படமாட்டாது. சபைத்தலைவருக்கு சந்தைக்குள் வெவ்வேறு வியாபாரத்துக்கு வெவ்வேறு இடங்கள் வகுத்து வைக்க அதிகாரமுண்டு. குத்தகைகாரரும் கீழ்க்குத்தகைகாரரும் சபைத்தலைவரின் தீர்மானத்துக்குக் கட்டுப்படவேண்டும்

சந்தைகள்.

1. பெரியகடை (இரண்டு பிரதானமான நிரந்தர சந்தை வளவுகளும் சபையால கட்டின பலசரக்குக் கடையும் சபையின் அனுமதியுடன் கட்டின சாலைகளும் தகரக் கொட்டில்களும் பிறநீங்கலாக) அத்துடன் தகரக்கொட்டிலுக்கும் ரேட்டுக்கும இடையிலுள்ள வெளி இடமும் பிற நீங்கலாக விற்பனவு வசதி இல்லாதவுக்கு கொடுத்த இடமும் பிற நீங்கலாக. (Marketing Dept)

2. பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் மீன் கடையும் (பண்ணைத்துறையில் மீன் விற்கும இடமும்.)

3. சின்னக் கடை — (இறைச்சிக்கடைகள் பிறநீங்கலாக)

4. (செகனுந்தர் சந்தை இரண்டு அறைகளுடனும்) சபையின் அனுமதியுடன் கட்டின தகரக்கொட்டில் பிறநீங்கலாக.

5. அரியாலைச்சந்தை (அறை பிறநீங்கலாக.

6. பெரியகடைக்குக்கிட்ட இருக்கும் காலையும் பஸ் ஸ்ராண்டும்.

7. முத்திரைச்சந்தை (ஓடு கடைபிறநீங்கலாக.).

8. கொழும்புத்துறைச் சந்தை.

9. காவாத்துறைச் சந்தை.

10. பாஷையூர்ச் சந்தை.

கா. சண்முகம்
நகரசபைக் கொம்மிஷனர்.

நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்,
15-9-1951 ம் ஆண்டு.

G. 30 21—9—51.

## நமது கலை நிலையம்

**விநாயகர் மஞ்சரி**

இதன்கண் விநாயகரகவல், விநாயக கவசம், அஷ்டோத்தர சதநாமம், விநாயக புராணத் தோத்திரப் பாக்கள், விநாயகர் பன்னிரு திருநாமப் பாக்கள், விநாயகரைப் பற்றிச் சிவபூசை விளக்கத்துள்ள தத்துவ விளக்கம், பிரமாண்ட புராணக் குறிப்புக்கள் முதலிய அடங்கியுள்ளன; சதுர்த்தி விரதம் விநாயகசஷ்டி விரதங்களின் பெருமையும் குறிக்கப்பட்டுள்ளது. இவற்றை மஞ்சரியாகத்தொகுத்து வேண்டிய உரைகளை யெழுதியவர், செந்தமிழ்மணியும் சைவப் பெரியாருமாகிய மயிலாப்பூர் திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்; இதனை அழகுற அச்சிடுவித்து வெளியிட்ட புண்ணிய சீலர் பிக்ஷாண்டார் கோவிற் பெருநிலக்கிழார் திரு. சோ. இராஜசேகர பாலபிள்ளை (F. R, H. S.) ஆவர். விநாயகக் கடவுளை உபாசித்து வணங்குபவர்கட்கு இம்மஞ்சரி பெரிதும் பயன்படும். இந்நூல் கிடைக்குமிடம் திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை, 26 காரணீசுரர் கோயில் வீதி, மயிலாப்பூர், சென்னை.

**"வைத்தியன்"**

அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தாரால் மாசந்தோறுஞ் சஞ்சிகை வடிவாக வைத்திய சம்பந்தமான இவ்வெளியீடு சிலகாலம் வெளிவராதிருந்து இப்பொழுது பழைய சிறந்த முறையிற் கிரமமாக வெளிவரலாயிற்று; இதன்கண் வைத்திய சம்பந்தமான, சுகாதார சம்பந்தமான பல அரிய விஷயங்கள் காலந்தோறும் வெளிவருவன. இப்பொழுது இதன் ஆசிரியர் வைத்திய கலாநிதி V. கனகசபையாவர்; வைத்தியர்கள் மாத்திரமல்லாமல் ஏனையோரும் இப்பத்திரிகையை நன்கு வரவேற்று ஆதரித்தல் கடனாகும். பெறவிரும்புவோர்: ஆசிரியர் "வைத்தியன்" பெருமாள் கோவில் தெற்கு வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற் பெறலாகும்.

எமது பார்வைக்கனுப்பிய புத்தகம் பத்திரிகைகளின் பொருட்டு நன்றி கூறுகின்றோம்.

## திருக்கோணாசலத் திருவுருவங்கள்

இப்பத்திரிகையின் சென்ற பிரசுரத்தில் வெளியிட்டவாறு மேற்படி திருவுருவங்கள் வருகிற ஞாயிற்றுக் கிழமை (23-9-51)யாழ்ப்பாணம வந்துசேரும். அன்று பிற்பகல் அவற்றை யாழ்ப்பாண நகரசங்கத்தலைவர் வரவேற்பார். பின்பு அவை சகல வரிசைகளுடன் கண்டி வீதிமூலம யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்யப்படும். அன்பர்கள் தரிசனத்தை யுத்தேசித்து, அவை அன்றிரவும் அடுத்தநாட் பகலும நகரசபை மண்டபத்தில் வைக்கப்பெறும். திங்கட்கிழமை (24-9-51) பிற்பகல் 4½ மணிக்கு அவை அங்கிருந்து மணிக்கூட்டு வீதி, ஆசுபத்திரி வீதி, காங்கேயன்றுறை வீதி, கல்லூரி வீதி வழியே யாழ்ப்பாணம சைவபரிபாலன சபை காவலர் மண்டபத்துக்கு எழுந்தருளப்பெறும். அங்கு விசேட ஆராதனைகள் தேவாரபாராயணம் முதலியன நடைபெறும். 10 நாள் வரைக்குக் குறித்த மூர்த்திகள் அங்கு தங்கியிருக்கும். யாழ்ப்பாணக்குடா நாட்டின் ஏனைய விடங்களிலுள்ள சைவமக்கள் விண்ணப்பஞ் செய்தால் அவற்றை அவர்களுடைய இடங்களுக்கு எழுந்தருளச் செய்வோம. அங்ஙனம் அவற்றை அழைக்க விரும்புவர்கள் காலதாமதமின்றி 24 - 9 - 51 க்கு முன் சைவபரிபாலனசபைத் தலைவருக்குத் தங்கள் விண்ணப்பங்களை யனுப்புவார்களாக.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபை
20 - 9 - 51.

**திருத்திக்கொள்க:**

சென்ற செவ்வாய்க்கிழமைப் பிரசுரத்திலே 3-ம் பக்கத்திலே வெளிவந்த விவாகச் செய்தியில் காங்கேயன்றுறை விக்கினேசுர வித்தியாசாலை என்றிருப்பதை, சரவெட்டி விக்கினேசுர வித்தியாசாலை எனவும், சி நாகலிங்கம் என்றிருப்பதை இ. நாகலிங்கம் எனவும் திருத்திக் கொள்க.

## —ஏழாம் பாலபாடம்—

இப்பாலபாடம் இப்பொழுது அவதாரிகை பரீட்சைக்ஷ வினாக்கள் இலக்கண விளக்கம் வினாக்களென்னுமிவைகள் அநுபந்தமாகச் சேர்த்து வெளியிடப் படலாயிற்று.

விலை சதம் 90

மனேஜர்.

**கற்றோர்க்கழகு கசடற மொழிதல்**


இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= 0 =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

# பிரகடனம்

**திருவாதவூரடிகள் புராணம்**
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

**பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)**
சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுக்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

**வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்**
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

**அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்**
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

**மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்**
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது.
விலை ரூ. 1—20 ச.

**உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)**
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

**ஈழமண்டல சதகம்:**
ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் ... ... ரூ. 1·00

**சைவ சமயசாரம்:**
ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றுயுள்ளது. விலை சதம் 45

**"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)**
சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அஞ்சல் 10)

**முற்பணம் அனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்**

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna,



# யாழ்ப்பாணம் ஐக்கியஸ்பந்தி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை.**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**
சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

**தவணை வரையறுக்கப்பட்ட சேமிப்பணம்**
சேமிப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்பதும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்.**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

Std. 14 20-11-46—20-11-49

S. கனகசபை
சிறாப்பர்.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Friday September 21 1951

## சுதேச மொழி ஆசிரியர்கள் தேவையாம்

### ஆசிரியர் பரீக்ஷையில் ஒரு பகுதியில் மாத்திரம் தேறினவர்களும் ஆசிரியர்களாய் நியமனம் பெறுவார்களாம்

அரசினர் உதவிபெறும் பாடசாலைகளிலும் அரசினர் பாடசாலைகளிலும் 2000 சிங்கள உபாத்தியாயர்களும், 300 தமிழ் உபாத்தியாயர்களும் தேவைப்படுகின்றனரென வித்தியா பகுதியார் மதிப்பிட்டிருக்கின்றனர். இப்போது ஆலோசிக்கப்படும் ஓர் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுமெனின் இக்குறைவு நிவிர்த்தியாகுமாம். ஒவ்வொரு வித்தியா பிரிவிலும் ஆசிரியபரீட்சையில் ஒருபகுதியில் மாத்திரம் தேறியிருக்கும் சுவபாஷா ஆசிரியர்களைப் பதிவு செய்யும்படி அவ்வப்பிரிவு வித்தியா தலைமை உத்தியோகத்தர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர். ஆசிரிய போதனா வித்தியாசாலைகளிற் பயிற்றப்பட்டுத் தேறி வரும் ஆசிரியர்கள் இப்போதுள்ள குறைவை நிவிர்த்தி பண்ணக்கூடிய காலம் வரும்வரை, ஆசிரியர் பரீக்ஷையில் ஒருபகுதியில் மாத்திரம் சித்தி பெற்றுள்ள ஆசிரியர்கள் சமயோசிதமாக நியமனம் பெறுவார்களெனவும், அதனால் சுவபாஷா ஆசிரியர்கள் தொகையில் இப்போதுள்ள குறைவு வருகிற அக்டோபர் மீ முதலாந் திகதியளவில் நீங்கி விடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பிருத்தானிய பிரதமரின் சமன் பிடிக்கும் முயற்சி

பிருத்தானிய பிரதமராகிய மிஸ்டர் அட்லி காஸ்மீர விஷயமாகச் சண்டைமூளாமல், பண்டிதநேருவையும் பாகிஸ்தான் பிரதமராகிய லியாகத்அலிகானையும் லண்டனுக்கு ஒருங்கு கூப்பிட்டு விவகாரங்களைக் கலந்து பேசித் தாம் மத்தியஸ்தராகவிருந்து இருபிரதமர்களையும் சமாதானஞ் செய்துவிட நோக்கங் கொண்டுள்ளாராம்; இந்த இரு பிரதமர்களுக்கும் பிருத்தானிய பிரதமர் விரைவில் அழைப்புப பத்திரம் அனுப்புவாரென லண்டனில் வெளிவரும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன; அவருடைய அழைப்பிற் கிசைந்து பாகிஸ்தான் பிரதமர் ஒருபோது லண்டனுக்குப் போனாலும், பண்டிதநேரு உடன்பட்டுச் செல்வாரென நம்ப இடமில்லையாம். சுதந்திர இந்தியாவைவிட்டுப் பிருத்தானிய பிரதமர் கொண்டுள்ள அபிப்பிராயம் ஆட்சேபத்திற்கிடமானதென்பதை இந்தியர் மாத்திரமல்லாமல் உலகம் முழுதும் அறியும்; மிஸ்டர் அட்லி இந்திய பிரதமரைத் தம்மிடம் வரும்படி கேட்டால், அப்படி வருவதால் ஒருபயனுமில்லையென்று அவர் மறுத்துவிடுவாரென இந்திய பத்திரிகைகள் கூறுகின்றன.


# சாலாமிஷ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
காலறுத்தல் விலைரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

**சிவஞான பற்பொடி**

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

**எமது சோல் ஏசன்றுகள்**

| | |
|---|---|
| 1 மோகன் அன் கொம்பனி<br>No. 66 முதலாம் குறுக்குத்தெரு<br>கொழும்பு | 2 நவலெட்சுமி புத்தகசாலை<br>செட்டியார் தெரு<br>கொழும்பு |

எமதுவிலாசம்
K. ஆறுமுகம்பிள்ளை
நி 8/1 தட்டாரதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு
M 92



வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

# திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி றேட்
யாழ்ப்பாணம்

Std 2